
# பழந்தமிழர்களின் தொழில்நுட்பச் சிந்தனைகள்

(தொகுதி-3)

தமிழ்ச்சுரபி பதிப்பகமும் & SA பதிப்பகம் இணைந்து நடத்திய பன்னாட்டு கருத்தரங்கம்



தொகுப்பாசிரியர்கள்

முதுமுனைவர். இரா. புவனேஸ்வரி

முனைவர். ச. பிரவீன்குமார்

முனைவர். ஏ. கோதண்டராமன்

பழந்தமிழர்களின் தொழில்நுட்பச் சிந்தனைகள்


**Brilliant College of Arts and Science for Women**

**பிரிலியண்ட் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம், தமிழ்நாடு - 614715



திருவாரூர் மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் ஆயிரக்கணக்கான பி.எட் பட்டதாரி ஆசிரியர்களை உருவாக்கிய கல்வியியல் கல்லூரி, 2025ம் ஆண்டு முதல், தமிழ்நாடு அரசின் அங்கிகாரம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்று, புதிய மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கியுள்ளது. *AI, Robotics, Data Analyst, Data Scientist* போன்ற அதிக ஊதியம் வாங்கும் வேலைகளுக்கு மாணவர்களைத் தயார் செய்யும் பெருமைக்குரிய கல்லூரி.

**Courses Offered:**

- B.A. Tamil
- B.Com. General
- B.Sc. Zoology
- B.Sc. Computer Science
- B.Sc. Artificial Intelligence & ML



**B.Ed.**
(2 years Regular course)

**B.Sc. B.Ed.**
(4-year Integrated Course)

✓ 10+ Years of Excellence
✓ 1000+ Successful Graduates
✓ Women's Safety & Support Cell

*The Right Place to Achieve Your Dreams – BRILLIANT!*



தமிழ்ச்சுரபி பதிப்பகம்

விலை:200/-

# பொருளடக்கம்

1. பழந்தமிழரின் கப்பற் கலை 9
**முனைவர் இரா. புவனேஸ்வரி**

2. புறநானூற்றில் நீர் மேலாண்மை 16
**முனைவர் ச.பிரவின்குமார்**

3. தமிழ்ச் செவ்விலக்கியங்களில் தொழில் நுட்பம் 20
**முனைவர் ஏ. கோதண்டராமன்**

4. பாசனத் தொழில்நுட்பம் – முன் நகர்தலை நோக்கிய பயணம் 35
**முனைவர் த. பூவை சுப்பிரமணியன்**

5. தமிழர் பண்பாட்டில் சமூக மேம்பாடு 40
**இரா. சீமா**

6. இணையதள வளர்ச்சியும், தமிழ் – மின்னூல் பதிப்பு முயற்சியும் 48
**முனைவர் கி. அன்பு**

7. சிலப்பதிகாரத்தில் கட்டடக்கலை 58
**முனைவர் செ. சத்யா,**

8. சங்ககாலத் தமிழர் கட்டிடக்கலை: வாழ்வியலும் கலைநயமும் 68
**திருமதி த.அமுதா,**

9. தலைப்பு: பண்டைய தமிழரின் கடல்வழிப் போக்குவரத்து 79
**முனைவர் வீ.அன்னபூரணி,**

10. ஓடு உற்பத்தித் தொழிலாளர்களின் தொழில்நுட்பச் சார்பும், வாழ்வியல் விழுமியங்களும் – கள ஆய்வு 89
**செ.பினோ[1], முனைவர்.சி.வைலா பேபி[2]**



11. பழந்தமிழரின் தொழில்நுட்பச் சிந்தனை: 95
**எந்திரம் (எந்திரப் பாவை) முனைவர் சோ. ராஜலட்சுமி**

12. பரதவர் வாழ்வியல் காட்டும் தொழில்நுட்பங்கள் 99
**முதுமுனைவர் அ.இராஜலட்சுமி**

13. பழந்தமிழ் இலக்கியத்தில் தொழில்நுட்பச் சிந்தனைகள் 109
**ச.விஜயலட்சுமி**

14. பழந்தமிழ் இலக்கியங்களில் வேளாண்மை 115
**முனைவர். ஜெ. அருள் இருதய ஜெயந்தி,**
**திருமதி. பா. நந்தினி**

15. சங்க இலக்கியத்தில் சொல்வழித் தொடர்பு 121
**முனைவர் மு. காமராஜ்,**

16. தமிழக அகழாய்வுகள் காட்டும் தமிழர் பண்பாடு 129
**முனைவர் சு. செல்வக்குமார்**

17. சங்ககால மக்களின் வாணிபம் முறைகள் 137
**முனைவர் ம.காயத்ரி**

18. நாணயங்களில் எழுத்துப் பொறிப்புகள் 146
**முனைவர் ம. சந்திரசேகரன்**

19. தமிழரின் தொழில்நுட்பத்தில் கட்டடக்கலை 152
**முனைவர். பா. சாதிக்பாஷா**

20. பழந்தமிழ் சங்க இலக்கியத்தில் வேளாண்மை ஓர் கண்ணோட்டம் 161
**செல்வி.நவமணி ஆரணிகா** B.F.A

21. நுண்கலைகள் 167
**பரமேஸ்வரன் றொஷாந்த**

**முடிவுரை:**

வேளாண் பற்றிய செய்திகள் அக்காலக்கட்டதில் தனது அனுபவங்களை நூல்களாக அமைத்து குறிப்பிட்டதன் மூலம் இன்று நாம் பல செய்திகளை அறிய ஏதுவாக அமைந்துள்ளன. வேளாண் சார்ந்த கருவிகள் பற்றியும் சான்றோர்களின் அறிவியல் சிந்தனைகளையும் மற்றும் உழவு சார்ந்த அணுகுமுறைகளையும் எவ்வாறு கையாண்டுள்ளனர் என்ற தகவல்களையும், பழந்தமிழர்கள் வேளாண்மைக்குத் தரும் முக்கியத்துவத்தினையும் நம்மால் இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

**பயன்பட்ட நூல்கள்:**

1. அகநானூறு (மூன்று தொகுதிகள்), உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை 1990.
2. கௌமாரீஸ்வரி. எஸ். (ப.ஆ.), திருக்குறள், சாரதா பதிப்பகம், சென்னை 600 014.
3. பத்துப்பாட்டு மூலமும் உரையும், இரண்டாம் தொகுதி, சோமசுந்தரனார், பொ.வே., (பதிப்), கழக வெளியீடு, சென்னை, ம.ப., 1973.
4. பாலசுப்பிரமணியன், கு.வெ., நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை 600 098.
5. புலியூர்க் கேசிகன், புறநானூறு, சாரதா பதிப்பகம், சென்னை = 600 014.



# சங்க இலக்கியத்தில் சொல்வழித் தொடர்பு

---

**முனைவர் மு. காமராஜ்,**
உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத் துறை,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி – 642001
cell : 9952356301
E-Mail id: kamaraj301@gmail.com

---

மனித அனுபவம் வெளிப்பட வேறுவழியின்றி வடிவங்களை நாடுகிறது. அந்த வடிவங்களும் மொழி வடிவங்களே. மொழி அதற்கான தர்க்கங்களைக் கொண்டது. எனவே உள்ளுணர்வுக்கும் மொழிக்கும் எப்போதும் ஒரு குறியீட்டியல் உறவே இருக்கிறது. மொழி என்ற தன்னின் வேறான குறியீடு இன்றி, தன் ஆசைகளை வருத்தங்களை உள்ளுணர்வை வெளியில் சொல்ல வகையில்லை. மனிதன் தன்னை உணர்வதும் இந்த மொழிநிலைதான். எனவே உள்ளுணர்வை உலக வழக்கு என்று தொல்காப்பியரின் மொழியில் சொன்னால் குறியீட்டைச் செய்யுள் வழக்கு என்று சொல்ல முடியும். ஆதலால தமிழ் இலக்கியத்தின் வழியாகச் சொல்வழித் தொடர்புகளை ஆராய வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

**தகவல் தொடர்பு வகைகள்:**

தகவல் தொடர்பினைப் பொதுவாக அகத்தொடர்பு, புறத்தொடர்பு என இரு வகைப்படுத்தலாம். அதேபோல அகத்தொடர்பைச் சொல் அல்லாத் தொடர்பு (Non-verbal Communication) என்றும் புறத்தொடர்பைச் சொல்வழித்தொடர்பு (Verbal Communication) என்றும் வகைப்படுத்துவர். தகவல்தொடர்பு முறைகளில் சொல்வழித்தொடர்பு மிகத் தொன்மையானதாகக் கருதப்படுகின்றது. இதுவே பரவலாக அனைத்து இடங்களிலும் கையாளப்படுகின்றது. ஒருவர் தனது கருத்துக்களையும்,

உணர்வுகளையும் சரியாக வெளிப்படுத்துவதற்கான சிறந்த சாதனம் சொல்வழித்தொடர்பு மட்டுமே.

**தகவல்தொடர்பில் சொற்கள்:**

சொல்வழித் தொடர்பில் தகவலாளி சொற்களைப் பயன்படுத்தும்போது அதன் விளைவுகளையும் அறிந்துகொண்ட பின்பே அச்சொற்களைப் பயன்படுத்தவேண்டும். இச்சொற்களினால் நன்மை, தீமை இரண்டும் நிகழவும் அதிக வாய்ப்பிருக்கிறது. சொற்களின் மதிப்பைத் தகவலாளி உணர்ந்து கொண்ட பின்பே அதன்மூலம் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளிலிருந்து விடுபடும் வல்லமை அவர்களிடம் தோன்றும். இதனைக் குறிஞ்சிப்பாட்டில் தோழியின் வெளிப்படுத்துகின்றார் கபிலர், கூற்றில் அழுகுற வினையிடை நின்ற சான்றோர் போல,

**“இகன்மீக் கடவு மிருபெரு வேந்தர**
**இருபே ரச்சமோ டியானும் ஆற்றலேன்.”** (குறிஞ்சி.27–9)

எனும் வரிகளில் பகை வேந்தராகிய இரு பேரரசர்க்கிடையே நின்று அவரைக் கூட்டுத்தொழிலை மேற்கொண்ட சான்றோர் வருந்துதல்போல, யானும் உங்கள் இருவருக்கும் இடையே நின்று பெரிதும் வருந்துகின்றேன் என்று கூறுகின்றான். தலைவியும், செவிலியும் இரு வேறுபட்ட கருத்துடையவர்களாய் நின்று கொண்டிருப்பதால் இவர்களுக்கிடையில் சந்து செய்விக்கும் தொழிலைத் தோழி மேற்கொண்டிருக்கின்றாள். அவள் சொல்கின்ற சொற்களின் வலிமையைத் தோழி உணர்ந்த தன்மையினால் சான்றோரின் சொல்லை இங்கு உவமைக்கூறி தான் சொல்லப்போகும் செய்தியின் முக்கியத்துவத்தைக் கூறுகிறாள். அதன்பின்,

**“கொடுப்பினன் குடைமையுங் குடிநிரல் உடைமையும்**
**வண்ணமுந் துணையும் பொரிஇ எண்ணாது**
**எமியேந் துணிந்த ஏமஞ்சால் அருவினை**
**நிகழ்ந்த வண்ணம் நீநனி உணரச்**
**செப்பலான் றிசிற் சினவா தீமோ.”** (குறிஞ்சி.30–34)

எனும் வரிகளில் நிகழ்ந்தது அனைத்தையும் கூறிமுடித்து விடுகின்றாள்.



**குறியீடு:**

‘குறியீட்டுச் சொல்’ என்பது செய்யுள், வழக்கு, அர்த்தம், உலகவழக்கு. அதாவது எதார்த்தம், நடைமுறை எனுமாறு அமைப்பதும் அதுவே. உலக வழக்கு என்றாகி உள்ளுணர்வு அதாவது உளவியல் என்றும் இன்னும் ஒருபடியாக மேற்சென்று அனுபவத்தின் அடிப்படை என்றாகிட வழிவகுக்க வேண்டும். அவ்வாறே ஒரு துறையில் உருவாக்கப்பட்ட சொற்கள் தமிழ் மக்களின் அனுபவ அறிவிற்கு ஏற்கும் வகையில் உளவியல் அனுபவ அறிவுப்பொருளின்று உதித்ததென தனிநபரும் உணர்ந்தறியும் எதார்த்தப் பயனறி திறனுக்குரியதாய் காலம் காலமாகவே அது அறிந்துணரும் வகையில் அமைதல் வேண்டும்.

நெடுநல்வாடையில் உள்ளடக்கத்தைப் படித்துப் பார்த்தால் முக்கியமான ஒரு காட்சியாகத் தலைவி தனியாகப் படுத்திருக்கும் கட்டிலின் மேற்பகுதியில் ஒரு சித்திரம் தீட்டப்பட்டிருக்கிறது. தன்னைப் பிரிந்த கணவனுக்காய் ஊன் உறக்கமின்றி, ஆபரணங்கள் போடாமல் நல்ல ஆடை அணியாமல் இருக்கும் அந்த நங்கையின் கண்ணில் விழும் அந்தச் சித்திரத்தில் ரோகிணி நட்சத்திரம் தன் துணையுடன் சேர்ந்திருக்கும் காட்சி சித்திரிக்கப்படுகிறது. மிகப்பெரிய துயரில் பல நாட்களாய்த் தன்னை மறந்து இருக்கும் அப்பெண் அக்காட்சியைப் பார்த்து ஏதும் பேசவில்லை, அழவில்லை, அரற்றவில்லை. பதிலாக அவள் கன்னத்தில் ஒரு சொட்டுக் கண்ணீர் வடிகிறதாம். அதை அவள் தன்விரல் நகத்தால் சுண்டி விடுகிறாள். அவ்வளவுதான் கவிதையில் வருகிறது.

குறிகளும் கைகாட்டிகள் போலத்தான். எப்படிப் பயணிகளுக்குக் கைகாட்டிகள் ஓர் ஊரை அடையாளங் காட்டுகின்றனவோ, அதுபோல நூலில் உள்ள அர்த்தம் என்ற ஊரை அடைய மொழியில் உள்ள குறி பயன்படுகிறது என்பது ஃபூக்கோவின் எண்ணம். அதுபோல நூலில்மறைந்திருக்கும் அல்லது கண்டுபிடிக்கப்பட்ட கருத்தில் அல்லது பொருளின் அர்த்தத்தைக் கண்டு கொள்ளவும் எழுத்துக்களின் பதிவும் குறியீட்டு வடிவங்களாக பயன்படுத்தப்பட வேண்டும்.

**மொழி :**

மொழி என்ற அடையாளத்திற்கும் அர்த்தத்திற்கும் நடுவில் ஓர் உறவு உள்ளது. அந்த உறவு ஒப்புமையின் அடிப்படையில்

செயல்படுகிறது. தமிழ் மரபில் பழகிப் போன நமக்குப் புதிய சொல்வடிவம் முதலில் சற்று சிந்தித்துப் பார்த்தால்தான் புரியும். காரணம் நம் சிந்தனைத் தடம் பழக்கத்திற்கு வராத நிலை. அதாவது சிந்தனைத் தடம் உருவான பாதை வேறு. உருவாக்கியவன் வேறு. ஆதலால் சிந்தனை உலகியல் வழக்கோடு இணையும் வரையில் அது செய்யுள் வடிவிலேயே தான் இருக்கும். ஆகவே தான் நாடக வழக்கு எனும் பயில்முறை வழக்கிற்கு அதனைக் கொண்டு வருதல் மொழியாக்கத்தின் சிறப்பு.

> **"இரும்புனம் புடையல், ஈகை வான்கழல்**
> **மீன்தேர் கொட்பின் பனிக்கயம் மூழ்கிச்**
> **சிரல் பெயர்ந்தன்ன நெடுவள் ஊசி**
> **நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்"** (பதி 42: 1–4)

இங்கு இரத்தத்தின் உள்ளாக ஊசியை நுழைத்து ஒரு வீரனது மார்பின் புண்ணை ஆற்றுவதற்குத் தைத்தத் தழும்பைக் குறித்து பதிற்றுப்பத்து பேசுகிறது. வீரனின் புண்ணை ஆற்றுவதற்கு ஊசியைக் கொண்டு தைத்திருக்கின்றனர். அதனை 'நெடுவள் ஊசி' என்றுகுறிப்பிடுகின்றனர். நீண்ட வெண்மையான ஊசி என வடிவமைப்பைக் கூறி, பயன்பாட்டு நிலையில் சொல்லாட்சியை அமைத்திருக்கின்றனர். இவை (நெடுவள் ஊசி) மருத்துவ துறையின் கலைச் சொல்லாகவே காணமுடிகிறது. இவ்வாறே எல்லாத் துறைகளிலும் கலைச்சொல் உருவாக்கப்படல் வேண்டும். அதன் உலகத் தொடக்கத்தில் வெறும் ஒலிகளை மனிதர்கள் எழுப்பியபோது அது மொழியல்ல. ஆனால் அந்த மொழிகளுக்குள் ஒரு தர்க்கம் ஏற்பட்டு 'எனக்கு பசிக்கிறது' என்று உருவான போது ஒரு மொழியின் பண்பு ஏற்பட்டது. அதாவது வாக்கியமான ஒரு நவிலல் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்னும் பண்புடன் உருவாகையில் மொழி உருவாகிறது. நவிலலுக்க அடிப்படை வினைச்சொல்தான். ஏனெனில் பெயர்ச்சொல் போலன்றிச் செயலை, இயக்கத்தை நேரடியாகக் குறிப்பது வினைச்சொற்கள்தான். 'நான் மரத்தை வெட்டினேன்' என்பதில் வினைச்சொல்தான் ஆற்றலுடைய சொல். அதாவது பேச்சுக்கு வினைச்சொல் முக்கியமாகிறது.



**சொல்வன்மை:**

தன் மனத்தில் தோன்றியதையெல்லாம் அனைவரிடமும் வெளியில் கூறிவிடாமலும், கேட்பது அதிகமாகவும், பேசுவது குறைவாகவும் இருப்பதே சொல்வன்மையாகக் கருதப்படுகிறது. கூறுவதையும் செவிக் கொடுத்துக் கேட்டபின்பு, இவற்றில் சில சொற்களில் தம் கருத்தைக்கூறி, அக்கருத்துக்கு எதிர்க்கருத்து தோன்றமுடியாதவாறு கூறுவதே சான்றோரின் சிறப்பியல்பு, தான் கூறுகின்ற கருத்தை அனைவரும் மனமுவந்து ஏற்றுக்கொள்ளுமாறு கூறுவது அச்சொல்லின் தனிச்சிறப்பு, ஒருவர் கூறிய சில சொற்களில் மூலம் போரே நின்றுவிட்டது என்ற செய்தியை மதுரை வேளாசான், அனைவரும்

> **"வயலைக் கொடியின் வாடிய மருங்குல்**
> **உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்**
> **எல்லி வந்து நில்லாது புக்குச்**
> **சொல்லிய சொல்லோ சிலவே யதற்கே**
> **ஏணியுஞ் சீப்பு மாற்றி மாண்வினை**
> **யானையு மணிகளைந் தனவே."** (புறம்.305)

எனும் பாடலில் குறிப்பிடுகின்றார். இரு வேந்தர்கள் போருக்கு வேண்டியனவெல்லாம் செய்ய முற்பட்டனர். வயலைக்கொடிபோல வாடிய இடையினையும், வருத்தத்தால் ஊர்ந்து செல்வது போன்ற நடையினையும், இளமையினையுமுடைய தூதாக வந்த பார்ப்பாள் இரவின்கண் வந்து நில்லாமல் உள்ளேசென்று, வேந்தரிடம் சொல்லிய சொற்களோ பலவல்ல சிலவே. அதன் பயனாக ஏணியையும் சீப்பையும் நீக்கிப் போர் பல செய்து மாட்சிமைப்பட்ட யானைகளையும் அவற்றின் பக்கத்தே கட்டப்பட்ட மணிகளையும் நீக்கிவிட்டனர் என்கிறார். எந்தச் சொல்லைப் பேசுவதாக இருப்பினும் அதனால் பயன் உண்டாக வேண்டும்.

எந்தச் சொல்லின்மூலம் தகவல் கேட்பவரை இணங்கச் செய்ய முடியுமோ அந்தச் சொல்லைத் தேர்ந்தெடுத்துப் பேசவேண்டும். இதனை வள்ளுவர், "சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து." **(திருக். 645)** என தான் சொல்லிய சொல்லுக்கு மறுதலையான சொல் தோன்றாமல்

சொல்வதையே சொல்வன்மை எனக் குறிப்பிடுகிறார். சான்றோர் தாம் சொன்ன சொல்லை உறுதியுடன் பற்றுவர். எத்தகைய துன்பம் நேரிடினும் அச்சொல்லைக் காப்பற்றுவதில் முனைப்புடன் ஈடுபடுவர். இதை அரசர்களின் வஞ்சினம் மொழிதலில் கண்கூடாகக் காணலாம். தாம் சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதில் அவர்கள் எக்காலத்திலும் தவறுவதில்லை.இதனை பூதப்பாண்டியனின் பாட்டு நிரூபிக்கின்றது. ஒல்லையூர் தந்தப்பாண்டியன்,

**“என்னோடு பொருது மென்ப வவரை**
**ஆரம ரலறத் தாக்கித் தேரொ**
**டவர்புறங் காணே னாயினும்**
**சிறந்த பேரம ருண்க ணிவளினும்**
**பிரிக அறநிலை திரியா வள்பி னவையத்துத்**
**திறனி லொருவனை நாட்டி முறைதிரிந்து**
**மெலிகோல் செய்தே வாகுக.”** (புறம், 3–9)

எனும் வரிகளில் என்னோடு பொருவேமென்று சொல்லும் வேந்தரைப் பொருத்தற்கரிய போரின்கண்ணே அலறப்பொருது தேருடனே அவர் உடைந்தோடும் புறக்கொடையைக் கண்டிலேனாயின் எனக்குச் சிறந்த மையுண்ட கண்ணினையுடைய இவளினும் நீங்குவேனாகுக. அறமானது நிலை கலங்காத அன்பினையுடைய அவைக்களத்தில் அறத்தின் திறப்பாடில்லாத ஒருவனை வைத்து முறைகலங்கிக் கொடுங்கோல் செய்தேனாகுக.’ என உரைக்கின்றார். இவ்வாறாகத் தான் சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியாமல் போகும்போது தன் உயிரைவிடவும் அவர்கள் சிறிதும் தயங்கவில்லை. தான் சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியாமல் அவன் உயிர்துறந்தான் எனும் செய்தியை அவன் மனைவியான பெருங்கோப்பெண்டின் பாடல் (புறம்.246) உறுதி செய்கின்றது.

**“குழவி யிறப்பினு முன்றடி பிறப்பினும்**
**ஆளன் றென்று வாளிற் றப்பார்**
**தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத்**
**தரிஇய கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்**
**மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்**
**தாமிரந் துண்ணு மளவை ஈன்ம ரோவிவ் வுலகத் தானே.”**

(புறம்.74)



எனும் வரிகளில் அரசன் என்பவர் பிள்ளை இறந்து பிறப்பினும், தசைத்தடியாகிய மனை பிறப்பினும் அவற்றையும் ஆள்அல்ல என்று கருதாது அவற்றையும் வாளால் போழ்ந்து அடக்கம் செய்வர். அக்குடியின் பிறந்த யான் பகைவர் வாளால் படாது சங்கிலியால் பிணிக்கப்பட்ட நாய்போலப் பிணித்துத் துன்பத்தில் இருக்கின்றேன். உண்மையை மட்டும் பேசுபவர்களுக்கு எக்காலத்திலும் அச்சம் தேவையில்லை என்பதைத் தும்பி சேர்கீரனார், ”’நல்மொழிக்கு அச்சம் இல்லை.” (குறுந்.392,2)என உரைக்கின்றார். சான்றாண்மை உடையோர் ஒருவரிடத்து அவருக்கு நன்மையை விளைவிக்கும் நல்லமொழியைக் கூறுவதற்கு யாதோர் அச்சமும் தேவையில்லை எனும் செய்தியை உணர்த்துகின்றார். மேலும் தன்னை ஒருவன் மதிக்காதவிடத்து அவர் அரசரே ஆனாலும் அவர்களை உதறிவிட்டுச் செல்ல அவர்கள் ஒருபோதும் தயங்க மாட்டார்கள் என்பதை ஔவையாரின் பாடல் உணர்த்துகிறது.

**“வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி**
**வித்தித்தாம் உள்ளியது முடிக்கு முரனுடை யுள்ளது.”**

(புறம்.206; 2–3)

என்ற பாடலானது வண்மையுடையோரது செவியிடத்தே விளங்கிய சொற்களை விதைத்து தாம் நினைத்தவாறு பரிசிலைப் பெறும் வலிமையான நெஞ்சினையுடையவர் புலவர் எனும் கருத்தைத் தெரிவிக்கின்றது. ஒருவன் கூறும் சொற்களை அவனுக்கு நன்மையையும், தீமையையும் ஒருங்கே விளைவிக்கின்றன. தன் மனத்தையும் நாவையும் ஒருங்கே கட்டுப்பாட்டில். வைத்திருக்கும்போது அவனுக்கு என்றும் தீமை நிகழ்வதில்லை. மனிதவள மேம்பாட்டைப் புரிந்துகொள்ள முயற்சிப்பவர்கள் சொற்களின் தன்மையையும் புரிந்துகொள்ள முயலவேண்டும். அப்போதுதான் பணியாளர்களிடம் நன்முறையில் பேசி ஒழுங்காகச் செய்யவைக்கமுடியும்.

**தாகுப்புரை**

ஒருவர் தனது கருத்துக்களையும், உணர்வுகளையும் சரியாக வெளிப்படுத்த சொல்வழித் தொடர்பு பயன்படுகிறது. சொல்வழித் தொடர்பில் தூது முக்கியமாகக் கருதப்படுகிறது. ஆதிகாலத்தில்

மனிதன் அசைவுகள், குறியீடுகள், அடுத்தபடியாகச் சொற்கள் ஆகியவற்றை பயன்படுத்தி மற்றவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தினான். இவ்வாறு மக்கள் தங்களுக்குள் தொடர்பு கொள்வதில் இவை முதல்நிலையாகக் கருதப்படுகின்றன. இங்கு சொற்களின் பயன்பாட்டின் மூலம் போரை ஏற்படுத்தவும் முடிகிறது தடுக்கவும் முடிகிறது. ஆக்கமும் அழிவும் சொற்களின் வலிமையில் உள்ளன. அறிவியல் வளர்ச்சியின் காரணமாக இன்று தகவல் தொடர்புத்துறையில் பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.



# தமிழக அகழாய்வுகள் காட்டும் தமிழர் பண்பாடு

---

**முனைவர் சு. செல்வக்குமார்**
உதவிப்பேராசிரியர்
தமிழ் இலக்கியத்துறை
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி
9442549078
vinnselvan@gmail.com

---

பண்டைத் தமிழக வரலாற்றையும் தமிழர்களின் நாகரிகத்தையும் பண்பாடுகளையும் அரியத்துணை செய்யும் சான்றுகள் பல. அவை இலக்கியங்கள் இலக்கணங்கள் அயல் நாட்டார் எழுதிய குறிப்புகள், ஓலைச்சுவடிகள், நாணயங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், பட்டயங்கள் போன்றன. இந்த வரிசையில் மண்ணுக்குள் பல்லாண்டு காலமாகப் புதைந்து கிடக்கும் பழமையான பொருட்களான தொல் பொருட்கள் குறிப்பிடத்தக்கன. இந்தத் தொல்பொருட்கள் மண்ணை அகழ்ந்து பார்க்கும் ஆய்வுகளால் கிடைக்கப்பெறுவன. இவை உண்மைத் தன்மைக்கு மிகவும் நெருக்கமானவை ஆகும். இந்தத் தொல்பொருட்கள் இத்தகைய ஆய்வுகள் தமிழக அளவிலும் இந்திய அளவிலும் உலக அளவிலும் முன்னுரிமை கொடுக்கப்பட்டு செய்யப்படுகின்றன. தமிழகத்தில் மிகநீண்ட காலமாகவே இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வுகள் வழி தமிழர்கள் குறித்த வியக்கத்தக்க, போற்றத்தக்க ஆய்வுமுடிவுகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன.

திறவுச்சொற்கள்

ஓலைச்சுவடிகள், நாணயங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், பட்டயங்கள், தொல்லியல்.